48170

# தேசிங்குராஜன் சரித்திரம்

[illegible]

10-892MKM3T
N14
148170

உ

ஸ்ரீ ராமஜெயம்.

—o—

டி. என். சுந்தரராவ், டி. ஜெகநாதநாயுடு. ஸி கன்னையா நாயுடு, குப்புசாமி முதலியார், ராஜாமணி, இவர்கள் விசித்திரமாக நடத்தி வந்த வர்ணமெட்டுகளடங்கிய

பார்ஸீ

# தேசிங்குராஜன்

சரித்திரம்.

இஃது


மதுரை டிஸ்ட்ரிக்ட்கோர்ட்லேட் பிளீடர்

மகா-ா-ா-ஸ்ரீ

நாகமநாயுடு அவர்கள்

குமாரர்

நா. கிருஷ்ணசாமி நாயுடு

அவர்கள் இயற்றியதை



மதுரை

புதுமண்டபம் புஸ்தகஷாப்

பி. நா. சி. ஏஜண்டு

மு. கிருஷ்ண பிள்ளை

அவர்களால்

திருமங்கலம்

ஸ்ரீகிருஷ்ணவிலாஸ அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை 1914 அணா—4.



ரிஜிஸ்டர் காப்பிரைட்.

39

0-892 MKN13,5

N14

148170

உ
சிவமயம்.

முந்துங்கள்! முந்துங்கள்!

# விளம்பரம்.

## தேசிங்கு ராஜன் சரித்திரம்.

நண்பர்காள்!

பிரசித்திபெற்ற தி. நாராயணசாமிபிள்ளை யவர்கள் பிரிய சிடராகிய வி. கன்னையா ட்ரூப்ஸ் என்னுங் கூட்டத்தாரால் தலைக்கருவியெனக் கையாண்டு வந்த கண்டிராஜா, தேசிங்கு, மதுரவீரன் என்னும் வீரியம் பொருந்திய சரித்திரங்களில் சிரேஷ்டமான தேசிங்கு சரித்திரத்தை ஷை கம்பேனியார்கள் நடத்திவந்த வர்ணமெட்டுகளோடு தற்போது நம்பதியில் புகழ் பெற்றோங்கும் ஸ்திரீபார்ட்டு பார்வதி ஜெகன் மோகன டி. குப்புசாமி முதலியாரவர்கள் பாடிவருகிற இந்துஸ்தான் வர்ணமெட்டுகளுங்கொண்டு ஜெகநாதநாயுடு சுந்தரராவ் முதலியவர் நடத்திய நல்லதங்காள் சரித்திரம் முதற்பாகம் இரண்டாம்பாகம் எனப்பாடியுள்ள மதுரை என். கிருஷ்ணசாமி நாயுடு என்பவரால் ஆக்காங்கமைந்த வர்ணமெட்டுகளால் மதுரம்பொருந்திய பாக்களாக இசைத்து அச்சிடப் பெற்றிருக்கிறது.

காப்பி ஒன்றுக்கு விலை ரூ 0—4—0

## ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் தெரிவிப்பது யாதெனில்.—

மதுரை டிஸ்டிரிக்ட்கோர்ட்லேட் பிளீடர் மகா-ா-ா-ஸ்ரீ நாகம நாயுடு அவர்கள் குமாரர் நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களால் இயற்றிய தேசிங்குராஜன்சரித்திரத்தை மதுரை புதுமண்டபம் புத்தகவியாபாரம் பி. நா. சிதம்பரமுதலியாரவர்கள் ஏஜண்டு மு. கிருஷ்ணபிள்ளையாகிய என்னால் அச்சிட்டு கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்திருப்பதால் மேற்படி புத்தகத்தை அச்சிடவிரும்புவர்களும் அச்சுக்கூடத்தலைவர்களும் 1887ளு புது 25—வது ஆக்டின் 20—வது பிரிவில் 6—வது விதியின்படி எம்மால் கோரும் நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாகவும் பினல் கோர்ட்டாரவர்கள் கேள்விக்கு சவாபுதாரிகளாகவு மிருப்பார்களென்று யாவரும் தடையின்றி கவனிப்பீர்களாக.

இங்ஙனம்.
மு. கிருஷ்ண பிள்ளை,
பி. நா. சி. ஏஜெண்டு,
புக்ஷாப் புதுமண்டபம்,
மதுரை

உ
பரமபதிதுணை.

## தேசிங்கு ராஜன் சரித்திரம்.

### விநாயகர் துதி.

வெண்பா.

பூதிங் கரசன் புகழு னெறிபூண்ட
தேசிங் கரசன் றிருக்கதையை—மாசிங்
கடையா துகூற வரியான் கமழுந்
தொடையான் கரியான் றுணை.

வந்தாண்டருள் செய்ஹரியே என்ற வர்ண மெட்டு.
இராகம்—ஆனந்தபைரவி—தாளம்—ஆதி.

பல்லவி.

மங்கள கணபதியே சுராயக
ணங்களுக்கருள் நிதியே (ம)

அநுபல்லவி.

மங்கை யுமையையிடப் பங்கிலமர்த்திட
திங்கட்சிரமணைத்த சங்கரனுக்குமூத்த
மகனே மாலின் மருமகனே
மாகளிற்றின் முகனே தேசிகனே (ம)

சரணம்.

சத்திரிய குலத்து தித்துப் பயமகல
யுத்தகளந்தானுற்று சித்திதனைக் கைப்பற்றுஞ்
சங்கு புகழ்பெரு தேசிங்கு
கதைபுகலவிங்கு வருற்றுலங்கு (ம)
பொன் றுலங்கு நின் கொம்பா லன்று பாரதப்போரை
என்றுந்துலங்கவடக் குன்றில் வரைந்தவனே
பூமி புகழ் கிருஷ்ணசாமி
பணிகிருபாநேமி ஆபிரநாமி (ம)

148170

## சரஸ்வதி துதி.

வீமுலசகி என்றவர்ண மெட்டு.
இராகம்—வராளி—தாளம்—ஆதி.

பல்லவி.

வரமருள் கிருபாகரிவேணி வருவாய் கலைவாணி (வ)

அநுபல்லவி.

நறுமறையி லுறைபவளே
நவிலுங்கவிக்குத் துணையிங்குநீயே (வ)

சரணம்.

பண்ணிசையும் பனுவலுமிப்
பாரோரெப்பவே பாங்குடன்
பகரவெனது நாவிருந்து
பரிவு செப்பவே நின் கடன்
மண்மிசை யுனையல்லாது
மற்றுருதவி சொல்வாயே
மறைமுதல்வன் மருவிநிதம்
மகிழுஞ்சுகிர்த மதுமொழித்தாயே (வ)

## முதலாவது ஸீன்.

## டில்லி ராஜன் தர்பார்.

இம்மாத்திரம் செய்யனுமானே என்ற வர்ணமெட்டு.
இராகம்—மோகனம்—தாளம்—ஆதி.

ஓரடி.

டில்லிசுல்தானும் சபையுற்றேனே ஆதியாய்நின்ற
வல்லநசூலினருளிற்றுனே உலகமாளும்
மல்லடுத்தபெரு மாமணித்தோளன்
மாசிலாதருண மானுதயாளன்
நல்லநீதிவழுவாப் புவிசீலன்



நத்திவந்த மார்தர்க் கனுகூலன் (டி
குந்தகுந்தள மகதநேபாளம்
கொங்கு வங்கமொடு குமுதவங்காளம்
சிந்து கர்னாட மராடமோ டீழம்
செஞ்சிக் கோட்டையொடு மிதிலைபாஞ்சாலம்
சேர்த்தரசுபுரி கீர்த்திமிகுபெரு
சீருலவுமிந்த பேருலகிற்சிறந்த
சேயன் மனற்றாயன் புவிசகாயன் பரநேயன்
சித்திரமாய்நவ ரத்தினமிழைத்திட
முத்தினமுமதி லொத்துமுடித்திட
செறிதொடையான் வெகு நறுங்கொடையான்
புவி நன்னடையான் போர் பின்னடையான் புகழ்
சிங்கம்போல பலசங்கஞ் சூழமுற
சங்களாட மிகு துங்கவங்கமொடு (டி)

(டி-ரா-ன்-வ-ம்) சேவகா!
(சே-ன்-வ-ம்) மகராஜ் வந்தனம்.
(ரா-ன்-வ-ம்) நமது மந்திரியை அதிசீக்கிரமாக அழைத்து வா!
(சே-ன்-வ-ம்) உத்தரவு

## மந்திரி சபைக்கு வருதல்.

பியாரி மோரிஹைஸே பாதுஜான் என்ற வர்ண மெட்டு
இராகம்—மோகனம்—தாளம்—ஆதி.

பல்லவி

அருமைமிகு அரசேவந்தனம்
அருமறை புகழுறுவீரனே திருமகளுறைபெறுமாரனே
நெறிமுறை வழுவுறாதீரனே வருபெரியவர்க் குபகாரனே (அ)

அநுபல்லவி.

இந்திரனும் நிகரில்லா சுந்தரனே உலகெல்லா
முந்தனையே புகழ்பேச வந்தவனே மகராஜ
இங்க வங்க கலிங்க கொங்க குடகு குலிங்க
இசைமூற்றிடு வறுபத்தைந் துகைந்தனையரசேபுரி (அ)

(ம-ரி-வ-ம்) மகராஜ் வந்தனம்.

(ரா-ன்-வ-ம்) கல்யாண், மந்திரிவரியா அமரும்.

(ம-ரி-வ-ம்) உத்தரவு.

(ரா-ன்-வ-ம்) ஆனல், நமது ராஜ்ய க்ஷேமங்களைப் பற்றி சிறிது ம்மிடம்விசாரித்துத் தெரிந்து கொள்ள இச்சையுற்றேன்உமதெண் ணமெனை.

(ம-ரி-வ-ம்) ப்ரபூ தாங்களெந்த விஷயத்தைக்குறித்துக் கேட் ப் பிரியப்பட்டாலும் அதற்குத் தகுந்த விடைசொல்லத் தயாரா ிருக்கிறேன்.

---

## தேசவிசாரணை.

நடந்த தென்ன சொல்லம்மா என்ற வர்ணமெட்டு.

இராகம்—நாதநாம கிரியை—தாளம்—சாப்பு.

பல்லவி

| | |
|---|---|
| பகருவீர் | மதிமந்திரி எமக்கு |
| பதில் விடையது | தந்த்ரி. |

அநுபல்லவி.

| | |
|---|---|
| இகபரம் புகழ்பெரு | மூகமதாசுலல்லா |
| இணையடிதொழுதவ | னருளாலே |
| ஜெகமெல்லாம் | நிகரில்லா |
| சுகமுற | இகமுறை |
| செலுத்தி வாரேனுமது | மதியாலே (ப) |

(ரா—ன்வ—ம்) மந்திரிசிரேஷ்டா கடவுளுடைய கிருபாகடா க்ஷத்தினலும் உனது தீக்ஷண்ய விசேடத்தாலும் நான் அரசாக்ஷிக் குறியவனயிருந்து யாதொருவழுவின்றி அரசியற்றி வருகிறேன் அல்லவா?

(ம—ரி—வ—ம்) ப்ரபூ, என்னதடை அந்த அல்லா குத்தாலா வினுடைய கிருபாகடாக்ஷம் தங்களுக்கு பூரணமாய்ப் பொருந்தி யிருப்பதாலும், மனுமுறைவழுவாது தாங்கள் இவ்வுலகத்தை பரி பாலிக்கும் திறத்தினலும் யாதொருகுறையும் பொருந்தாது செல் வமும் புகழும் சிறந்தோங்கி வருகின்றன.

தரு.

| | |
|---|---|
| அருவுருவாகிய | திருநபிகுலேகம் |
| மருங்குலமகபதி | யவர்தாமே. |
| வருமொரு | முறைப்படி |
| நிறையுறத் | தொழுவதை |
| வழுத்து வீரெனக்கதை | நீர்தாமே (ப). |

(ரா-ன்-வ-ம்) அமைச்ச! நமது அருமையான மகமதிய குலத் தவர்களும் மற்றுமுள்ள பிரம, க்ஷத்திரிய வைசிய, சூத்திரர்களும் அவரவர் முறைப்படி தெய்வ வணக்கம் புரிந்துடன் தந்தமக்கேற் பட்ட தொழில்களையும் சரிவர நடத்திக் கொண்டிருக்கிறர்களா?

(ம-ரி-வ-ம்) அரசே மேற்சொன்ன விஷயங்களைப் பற்றி யோசிக்கில் எந்தவிதத்திலுங்குறைவு செப்ப இடமில்லை.

(ரா-ன்-வ-ம்) அப்படியா ஆனல்,

தரு.

| | |
|---|---|
| ஓதும்நமதுபடில்லே | பூதலத்தன்னைப்புல்லே |
| ஓங்காசர்நமக்குச் | செலவேண்டும் |
| மாதப் | பகுதிப்பண |
| மீதனில் | நிறையதும் |
| மாறுமோவிங்கதனைச் | சொலவேண்டும் (ப) |

(ரா-ன்-வ-ம்) மந்திரி! நமது ராஜ்யத்தைச்சேர்ந்த சிற்றரசு கள் காலாகாலத்தில் நமக்குச்செல்லவேண்டிய பகுதிப்பணங்களை சரிவரச்செலுத்தி வருவதில்குறையுண்டோ.

(ம-ரி-வ-ம்) ப்ரபூ நமது ராஜ்யத்தைச்சேர்ந்த எல்லாஅரசர் களும் அவாளவாளுடைய அரசாக்ஷியின் மாதமும்மாரி பொழி ந்து செல்வம் பொங்கி வருவதால் யாதொரு தடையில்லாமற் கப் பங்களைச் செலுத்திவருகிறர்கள் ஆகையால் நமது நாட்டிலுஞ் செ ல்வம் பொங்கிவருகின்றன.

(ரா-ன்-வ-ம்) சந்தோஷம்.

(ம-ரி-வ-ம்) மகராஜ் வந்தனம்.

(ரா-ன்-வ-ம்) கல்யாண், மந்திரிவரியா அமரும்.

(ம-ரி-வ-ம்) உத்தரவு.

(ரா-ன்-வ-ம்) ஆனால், நமது ராஜ்ய க்ஷேமங்களைப் பற்றி சிறிது உம்மிடம்விசாரித்துத் தெரிந்து கொள்ள இச்சையுற்றேன்உமதெண்ணமெவை.

(ம-ரி-வ-ம்) ப்ரபூ தாங்களெந்த விஷயத்தைக்குறித்துக் கேட்கப் பிரியப்பட்டாலும் அதற்குத் தகுந்த விடைசொல்லத் தயாராயிருக்கிறேன்.

## தேசவிசாரணை.

நடந்த தென்ன சொல்லம்மா என்ற வர்ணமெட்டு.

இராகம்—நாதநாம கிரியை—தாளம்—சாப்பு.

பல்லவி

பகருவீர் மதிமந்திரி எமக்கு
பதில் விடையது தந்திரி.

அநுபல்லவி.

இகபரம் புகழ்பெரு முகமதரசுலல்லா
இணையடிதொழுதவ னருளாலே
ஜெகமெல்லாம் நிகரில்லா
சுகமுற இகமுறை
செலுத்தி வாரேனுமது மதியாலே (ப)

(ரா-ன்வ-ம்) மந்திரிசிரேஷ்டா கடவுளுடைய கிருபாகடாக்ஷத்தினாலும் உனது தீக்ஷண்ய விசேடத்தாலும் நான் அரசாக்ஷிக்குரியவனாயிருந்து யாதொருவழுவின்றி அரசியற்றி வருகிறேன் அல்லவா?

(ம-ரி-வ-ம்) ப்ரபூ, மன்னதடை அந்த அல்லா குத்தாலாவினுடைய கிருபாகடாக்ஷம் தங்களுக்கு பூரணமாய்ப் பொருந்தியிருப்பதாலும், மநுமுறைவழுவாது தாங்கள் இவ்வுலகத்தைப் பரிபாலிக்கும் திறத்தினாலும் யாதொருகுறைவும் பொருந்ாது செல்வமும் புகழும் சிறந்தோங்கி வருகின்றன.



தரு.

அருவுருவாகிய திருநபிரசூலெனும்
மருங்குலமகபதி யவர்தாமே.
வருமொரு முறைப்படி
நிறையுறத் தொழுவதை
வழுத்து விரெனக்கதை நீர்தாமே (ப)

(ரா-ன்-வ-ம்) அமைச்ச! நமது அருமையான மகமதிய குலத்தவர்களும் மற்றுமுள்ள பிரம, க்ஷத்திரிய வைசிய, சூத்திரர்களும் அவரவர் முறைப்படி தெய்வ வணக்கம் புரிந்துடன் தந்தமக்கேற்பட்ட தொழில்களையும் சரிவர நடத்திக் கொண்டிருக்கிறார்களா?

(ம-ரி-வ-ம்) அரசே மேற்சொன்ன விஷயங்களைப் பற்றி யோசிக்கில் எந்தவிதத்திலுங்குறைவு செப்ப இடமில்லை.

(ரா-ன்-வ-ம்) அப்படியா ஆனால்,

தரு.

ஓதும்நமதடில்லி பூதலந்தன்னைப்புல்லி
ஒங்காசார்நமக்குச் செலவேண்டும்
மாதப் பகுதிப்பண
மீதலில் நிறையதும்
மாறுமோவிங்கதனைச் சொலவேண்டும் (ப)

(ரா-ன்-வ-ம்) மந்திரி! நமது ராஜ்யத்தைச்சேர்ந்த சிற்றரசர்கள் காலாகாலத்தில் நமக்குச்செல்லவேண்டிய பகுதிப்பணங்களை சரிவரச்செலுத்தி வருவதில்குறைவுண்டோ.

(ம-ரி-வ-ம்) ப்ரபூ நமது ராஜ்யத்தைச்சேர்ந்த எல்லாஅரசர்களும் அவரவருடைய அரசாக்ஷியின் மாதமும்மாரி பொழிந்து செல்வம் பொங்கி வருவதால் யாதொரு தடையில்லாமற் கப்பங்களைச் செலுத்திவருகிறார்கள் ஆகையால் நமது நாட்டிலுஞ் செல்வம் பொங்கிவருகின்றன.

(ரா-ன்-வ-ம்) சந்தோஷம்.

## கோங்கு பக்கிரி தன்மந்திர சக்தியாற் பிடித்த தெய்வ லோகப் புரவியை அரசனிடங் கொண்டு வருதல்.

சம் சம் சம்பியாரி என்ற வர்ணமெட்டு.

இராகம்—தேசிகதோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

வையந்தனிப்புக ஜெய்யவந்துதித்தமக
வையகுளாடிவிக ரதிபதியே

அநுபல்லவி.

தெய்வலோகத்தனி லோங்குமிப்பரியே
தேவரீருமக்குத் தானிது சரியே
தெரிவி ரறிவீர் பெறுவீ ரிதனை
திக்கெங்கும் கீர்த்திமிகுந்த
சக்ரவர்த்தியே தீரிந்த (வை)

(ப-ர்-வ-ம்) ப்ராபூ வந்தனம்.

(ரா-ன்-வ-ம்) கல்யாண், பக்கீர் யாதுவிசேடம்.

(ப-ர்-வ-ம்) நான் இமயகிரிச் சாரலோரத்தில் தவம்புரிந்து கொண்டிருக்குங்கால் தெய்வ லோகத்திருந்து இப்புரவி வந்தது இதை என் மந்திரசக்தியாற் பிடித்தேன் அதையாருக்குத் தருவ தென்று ஆலோசிக்க தங்களுக்கே என்று தெரியவந்தது ஆகையா லிப்புரவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

(ரா-ன்-வ-ம்) அப்படியா நல்லது அதிக திருப்தி கொண் டேன் மந்திரீ, இவருக்குத்தகுந்த வெகுமதியளித்து அனுப்புங்கள்.

(ம-ரி-வ-ம்) அப்படியே.

(ரா-ன்-வ-ம்) மந்திரிவரியா இவ்வளவு இடம்பொருந்திய இக் தக்குதிரையின்மேல் சவாரிபண்ணுவதற்குச் சக்தியில்லை. ஆனால், நமக்குக்கீழ்ப்பட்ட சிற்றரசர்களில் சவாரிபுரியத் திறமுற்றவர் எவ ரென்றறிய ஒரு பந்தயம் வைக்கலாமென்று யோசிக்கிறேன், உம தபிப்ராயமென்ன?



(ம-ரி-வ-ம்) மெய்தான்! அப்படியே செய்யலாம் ஆனால், குதிரை சவாரிசெய்வதில் நமது செஞ்சிக்கோட்டை தேரணிசிங்கு வெகுசா மர்த்தியமுள்ளவர் மற்றரசர் களில் சிற்சிலர்மாத்திரமே சாமர்த்திய முள்ளவர்களென்றறிகிறேன்.

(ரா-ன்-வ-ம்) அப்படியா! நல்லது அவர்களையெல்லாம் நமது சபைக்கு வரும்படி கடிதமனுப்பி பந்தயத்துக்கு ஒரு நாள்நிச்சயப் படுத்தி வையுங்கள்.

(மரி-வம்) ஆக்ஞைப்படி.

## இரண்டாவது ஸீன்.

## தேரணிசிங்கு தர்பார்.

சித்ரப் பச்சைக் கச்சைக் கட்டியிருக்கும் தனமானுள் என்ற வர்ணமெட்டு.

இராகம்—அடாணா—தாளம்—ஆதி.

பல்லவி.

தஞ்சந்தஞ்சமென்றோர்க் கஞ்சலஞ்சலெனத் தானேகாக்கும்
தாரணியோர்புகழ் தேரணி ராஜன் வந்தானே

அநுபல்லவி.

மஞ்சுதுஞ்சுதோளன் ரஞ்சிதஞ்சேர் சீலன்
மங்களங்கள் தங்க விங்கிதங்கள் தங்க
வஞ்சியர்களாட வெஞ்சாமரைபோட
வளமேவிய திடசேகரன் உளமேவிய கிருபாகரன் (த)

(தே-வ-ம்) சேவக.

(சே-வ-ம்) ப்ராபூ வந்தனம்.

(தே-வ-ம்) அடே நான் எப்பொழுது இந்தச் சபையை நாடி வருவேனோ என்றெதிர் பார்த்திருக்கக் கூடிய மந்திரி இன்றிதுபரி யந்தம் காணோம் ஆகையால் சீக்கிரஞ்சென்று அழைத்துவா.

(சே-வ-ம்) ஆக்ஞை ப்ராபூ

## மந்திரி சபைக்கு வருதல்.

காமியென்றும் சாமியென்றும் என்ற மெட்டு.

இராகம்—இந்துஸ்தான் தோடி—தாளம்—ரூபகம்.

மாநிலத்தும் வானிலத்தும் மகிமைபெறுமன்னனே
மஞ்சுறுஞ்சுஞ்செஞ்சியில் வாழ்வுமிகு முன்னவனே
பொன்னரசி பின்னரசே. பொங்குபொலி பூபதியே
போற்றிச் சாற்றி ஏற்றினேன் பொன்னடிக்கு பூபதியே.

(ம-ரி-வ-ம்) அடிமையிருந்த அரசேவந்தனம்.

(தே-வ-ம்) கல்யாண் அமரும்.

(ம-ரி-வ-ம்) அப்படியே.

(தே-வ-ம்) நமது நகரத்தில் ஏதாவது விசேடங்களுண்டா?

(ம-ரி-வ-ம்) ப்ரபூ ஒன்றுமில்லை ஆனால் அநேக காலமாக தங்களுக்கு புத்திர பாக்கிய மில்லாதிருந்து அதினால் தாங்களடைந்திருந்த வருத்தத்தை அரச னெவ்வழியோ அவ்வழியே குடிகளென்ற முறைப்படி நகரத்தில் வசிக்கும் ஜனங்களெல்லாம் பூரணமாகக் கொண்டிருந் தார்கள் தற்போது கடவுளுடைய கிருபா கடாக்ஷத்தால் தாங்கள் புத்திரபாக்கிய மடையப்போகிறீர்களென்ற சந்தோஷம் மற்ற ஜனங்களுக் கெல்லா முண்டாகி காலத்தை எதிர்பார்க்கிறார்கள்.

(தே-வ-ம்) ஓ!! அப்படியா! சந்தோஷம்.

(சே-வ-ம்) ப்ரபூசமுகம் ஆசாரவாசலில் டில்லிராஜனால் அனுப்பப்பட்டவர் வந்தெதிர்பார்க்கிறார்.

(தே-வ-ம்) அவ ரவரலா மென் றறிவி,

(தூ-வ-ம்) வந்தனம்.

(தே-வ-ம்) கல்யாண யாதுகாரணம்.

(தூ-வ-ம்) ப்ரபூ டில்லி அரசனுனை சுல்தானவர்கள் தங்களை அவசியம் வரும்படி கடிதமனுப்பி யிருக்கிறார் இதோ பெற்றுக் கொள்ளுங்கள்.



(தே-வ-ம்) நல்லது இதில்குறித்துள்ள காலத்திற்குள் வருகிறதாக உங்களரசனுக்கு தெரியப்படுத்தும்..

(தூ-வ-ம்) உத்தரவு.

(தே-வ-ம்) மந்திரீ என்ன விசேஷமாயிருக்கலாம் நம்மால் அவருக்குச் செல்லவேண்டிய பகுதிப் பணங்கள் சரியாய்ச் சென்று வருகிறதா என்ன?

(ம-ரி-வ-ம்) அதிலொன்றுந் தடையில்லை நாளது வரைசெலுத்தி ரசீது வாங்கியிருக்கிறது.

(தே-வ-ம்) மந்திரி! நான்புத்திரசந்தானமடையும் சந்தோஷ நாளில் இராச்சியத்திலிராது, அன்னிய தேசத்திற்குப் போக நேர்ந்ததே என்னசெய்யலாம்.

(ம-ரி-வ-ம்) என்ன செய்யலாம் அவரோ மகமதியர் மேலும் நமக்கெல்லாம் மேற்பட்டஅரசன் அதிலுமுரடன் ஆகையால் குறிப்பிட்டகாலத்திற்குள் நாம் அங்குபோகாவிட்டால் நமதுவார்த்தைக்கு ஆக்ஷேபித்தானென்று ஏதாவது விபரீதம் எண்ணிவிடுவர் ஆகையால் கட்டாயம் போயே தீரவேண்டும்.

(தே-வ-ம்) வாஸ்துவந்தான் இளவரசனை அழைப்பியும்.

(ம-ரி-வ-ம்) உத்தரவு.

---

## இளவரசனை தாணிசிங்கு சபைக்கு வருதல்.

போயி வருவாய் நீ அனுமானே என்ற மெட்டு.

ஒரடி

இராகம்—மோகனம்—தாளம்—ரூபகம்

அண்ணை வந்தனந் தந்தேனே எனை
யழைத்த காரணமதை அறைவிரறியத்தானே (அ)

விண்ணவர் போற்றிடும் வேந்தனே வீரா
வெற்றிமாலை புயமுற்ற செம்பிரா

வண்ணமாமுடிதரித்த ஐய்யரா
வந்தாசர்பணியுஞ் சுந்தரதீரா (அ)

(தர-வ-ம்) அண்ணா நான் அரண்மனைக்குள் சிலகாரியார்த்தமா யிருக்கும்போது ஏதோ அவசர நிமித்தமாய் தாங்களழைத்ததாய் மந்திரியால் கேள்வியுற்று இவ்விடம் வரலானேன் என்னால் நடக்க வேண்டிய விஷயமிருந்து தெரிவித்தால் அதன்படி செய்யச் சித்த மாயிருக்கிறேன்.

(தே-வ-ம்) தம்பி! விசேடமொன்று மில்லை அவசரநிமித்த மாய் டில்லிக்குப் போகவேண்டி யிருப்பதால் பிரயாணத்திற்கு தயாராயிரு நான் அந்தப்புரம் சென்று வருகிறேன்.

(தர-வ-ம்) உத்தரவு.

(தே-வ-ம்) மந்திரி நாங்கள் வரும் வரை ராஜ்யத்தைப்பார்த் துக்கொள்ளுங்கள்.

(ம-ரி-வ-ம்) ஆக்ஞை ப்ரபூ.

## மூன்றாவது ஸீன்.
## சுபத்திரா அந்தப்புரம்.

(தே-வ-ம்) மாதே! சுபத்திரா டில்லிராஜனிடமிருந்து ஏதோ அவசரநிமித்தமாய் என்னை வரும்படி உத்தரவாயிருப்பதால் நான் போய்வருகிறேன்.

(சு-வ-ம்) நாதா என்ன இது?

தரு

இராகம்—ஆனந்த பைரவி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

இந்தச் சமயமதி லெந்தனைப் பிரிவதி
ப்படிமனம் வாதிதோ நாதா
மிகு சிறந்த என்மேலிருந்த
பூரண கெற்பவதியானென (இ)



அரசன் தரு.

என்னிருகண்மணி உன்னகமேதோ வெண்ணி
யேங்குவதழ கல்லடி நாயகி
மின்னரசியே டில்லி மன்னவன் வரச் சொல்லி
விடைசெய்திருக்க நாமும் தடைசெய்வதோநேமம் (எ)

சுபத்திராதரு.

அன்பேயனகுராய வென்பே உமைப் பிரிய
அரசனழைத்தா லென்ன பிரசவ [illegible] (ஃ)

அரசன் தரு.

தோகை மயிலனமே ஏகிவாரேனமே
தோழியருட னீயே வாழி பெற்றிருப்பாயே (எ)

(வ-ம்) கண்மணி! எந்த விஷயத்தைப் பற்றியும் ஆலோசிக்க வேண்டாம் இதோ அரசனுடைய உத்திரவு இதற்கு மீறினோமாகில் ஆக்கினைக்குள்ளாவோம் நீ தோழியருடன்பொழுது போக்கிக் கொண்டிரு நான் மூன்று நாளையில் வந்து சேருகிறேன்.

(சு-வ-ம்) நாதா, தாங்கள் அவசியம் போகவேண்டு மென்று சொல்லுவதால் சீக்கிரம் வந்து சேரப் பிரார்த்திக்கிறேன் இளவரசே.

(தே-வ-ம்) அவனுங் கூடவருகிறான்

(சு-வ-ம்) உத்தரவு.

## தேரணிசிங்கும் தரணிசிங்கும் டில்லிக்குப் பிரயாணப்படுதல்.

மானுடன் வேங்கைபுல் என்றமெட்டு.

இராகம்—இந்துஸ்தான்பியாகு—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

போய்வருவோம் தோளனே புகழும் சகோதரனே
வாய்மைமிகு டில்லிவேந்து வரச்சொன்னதாற்சிறந்து (போ)
கெற்பவதியா யென்றேவி தற்போதனைதாலேமேவி
விற்பனனிடத்திற் சென்று வேகமாய்வருவோமின்று (போ)

## 4-வது வீன்.

## டில்லி தர்பார்.

தரு.

"சொநாமே முகம்மது என்றவர்ணமெட்டு.

இராகம்—இந்துஸ்தான் பியாகு—தாளம்—ஆதி.

இந்தப் பாருலகந்தனிற் சீர்பெறுமெங்கள்
பாதுஷா சலாம்
பருவத நிகருறு வதிபலபுயவீர
பாதுஷா சலாம் (இந்)
ஆவலோடங்க மாருமதடிக்
கரசே வந்தனம்
அவசரத்துடனெம்மை வரவழைத்திடுமுண்மை
அருள்வி ரிங்கனம் (இந்)

(தே-வ-ம்) ப்ரபூ வந்தனம்.

(டி-வ-ம்) வந்தனம் அமருங்கள்.

[தே-வ-ம்) எங்களை அழைப்பித்த காரணம் சமுகம் தெரியப் படுத்தினால் அதன்படி செய்யக் காத்திருக்கிறோம்.

(டி-வ-ம்) அப்படியே, நம்மிடத்தில் ஒருபுரவியானது இருக்கிறது அதுமிகவும் சாமர்த்தியம் பொருந்தியது ஆனால் அதில் எந்த அரசன் ஏறி சவாரி செய்ய சாமர்த்திய முள்ளவனா யிருப்பனோ அவனைச் சக்கரவர்த்தியாக்கி நானும் அவனுக்கு கப்பங்கட்டிவரவும் அப்படி சாமர்த்திய மில்லாது பின்னிடும் அரசர்களை எழுவருஷம் சிறையிலடைத்து பிறகு விட்டு விடுவதாயும் பிரதிக்ஞைசெய்துளேன் அதற்காகவே தங்களை அழைப்பித்தது.

[தே-வ-ம்] ஆனால் இதற்கு முன் அப்புரவியின் மீது யாரா வது ஏறியிருக்கிறார்களாவென்ன?



[டி-வ-ம்] சிலவரசர்கள் அப்புரவியேற முடியாது நமது காராக்கிரகத்தில் அடை பட்டிருக்கிறார்கள்.

[தே-வ-ம்] அப்படியா! ஆனால் அப்புரவியின் திறத்தை அறிகிறேன். தம்பி! அப்பேர்ப்பட்ட பரவி யிருக்கு மிடம் தெரிந்து வரலாம் வா.

### தேரணிசிங்கு புரவியிடம் போய் சப்தத்தைக் கண்டு பயங்கொள்ளுதல்.

இந்த மடமங்கையாரென்று யாரென்றுசொல்லுவேன் என்றவர்ணமெட்டு.

இராகம்—இந்துஸ்தான் காபி—தாளம்—ஆதி

எம்மாலேயிது வாகாதாகா அஃதே
இப்புரவி ஒப்புறக் கனைப்பதால் வியப்புறு
இப்புரவித்திரு "வற்புதமேபெறு கற்பகநாட்டி லுற்பவமோ

[தே-வ-ம்] ஹோ! டில்லியைப் பரிபாலிக்கும் வேந்தே நான் இப்புரவியின் சமீபத்தில் போகிறதற்குள் அதனுடையசத்தத்தைக் கேட்டு என் மனமானது பதறுமானால் அதில் சவாரி செய்யவும் அதை அடக்கவும் எண்ணுவது பைத்தியமல்லவா ஆகையாலிந்தக் காரியம் என்னால் முடியாது.

[டி-வ-ம்] அப்படியானால் நீங்களிரண்டு பேரும் எழுவருஷம் சிறையிலிருக்க நேரிடும் மந்திரீ இவர்களைச்சிறையில் வைத்துவிவரந் தெரியப் படுத்தும்.

[ம-வ-ம்] ஆக்ஞைப்படி.

### தேரணிசிங்கு சிறையிலிருந்து வருந்துதல்.

அய்யோ என்ஜானகியை என்ற வர்ணமெட்டு.

இராகம்—முகாரி—தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

அப்பா தரணிசிங்கு அய்யா தரணிசிங்கு
அருஞ்சிறை யானோமடா தம்பி தம்பி (அ)

ஒப்பிப்புரவியேற ஒவ்வாததாலிங்கனம்
ஒடுங்கிட லானேனடா தம்பி தம்பி (அ)
கெற்பவதியென்தேவி கேட்டுயிர்தரிப்பாளோ
கெதியவளுக் காரடா தம்பி தம்பி (அ)
கற்பரசியானஎன் காதலியைத்திரும்ப
காண்பதெக் காலமடா தம்பி தம்பி (அ)
ஏழுவருடம் வரை இந்தச்சிறையிருந்தால்
எப்படி யாவதடா தம்பி தம்பி (அ)
பாழுஞ்சிறையிருந்தால் பாலன்மனைவியையும்
பார்ப்பதெக் காலமடா தம்பி தம்பி (அ)
[illegible] சுகமதாமசரும சிறப்பும்நீங்க
செல்வமுந் துறந்தோமடா தம்பி தம்பி (அ)
கொஞ்சமு மிரங்கிடா கொடும் பாதுஷாவாலே இந்த
கோலத்துக் கானேனடா தம்பி தம்பி (அ)

(தே-வ-ம்)—ஐயோ இளைஞ! இது என்னகாலம் இன்னம் ஒருவாரத்திற்குள் என் நாயகி அருமையான மகவை யீன்றெடுப்பாளே ஐயோ! இந்தப்புத்திரபாக்கியத்தை நாமிருந்து பார்க்கக் கொடுத்துவைக்கவில்லையே மேலும் ஏழுவருஷம் வரை நமது ராஜ்ஜியம் எப்படி நிலைநிற்கப்போகிறது எப்படி நாம் மீண்டும் நமது நாயகி குழந்தைகளையும் பார்த்தானந்திக்கப்போகிறோம் ஐயோ தெய்வமிப்படியும் நம்மை நிர்ப்பாக்கியஸ்திதியில் வைத்துவிட்டதா இதை என்நாயகி கேட்டு எப்படி சகிப்பாள்.

(தா-வ-ம்)—அண்ணா! என்னவிது.

தரு.

மலைக்கலாமோ தந்தையே என்ற வர்ணமெட்டு.

இராகம்—ஆனந்தபைரவி—தாளம்—ஆதி.

வருந்தலாகுமோ அண்ணாவே இனிஎன்கோவே (வ)
[illegible]நந்தவத்தாலேநலம் பொருந்துமரசகுலம்
[illegible]ம்வெற்றியேயல இருந்தும் மற்றவர்போல (வ)



புரவியேறமிருந்த திறமில்லாதாலேயிந்த
சிறையிலிருக்கலானோம் குறையில்மிழுந்துபோனோம் (வ)
வளநகரைத்துறந்தோம் கரும்விதியாலேநொந்தோம்
தளர்வதாலென்னகாணும் தைரியமல்லோவேணும் (வ)

(தா-வ-ம்)—அண்ணா தாங்கள் இந்த க்ஷத்ரியகுலத்திற் பிறந்தும் கேவலம் இந்தவிஷயத்திற்காக தைரியத்தை இழந்து வருந்துவது உசிதமல்ல ஏழுவருஷமும் ஏழுமாதத்தைப்போற்கழித்து நம்நாடு சென்று சுகமே வாழலாம் நம்குலத்திற் ஜனித்த இராமசந்திரப்ரபூ தன் சுகத்தையிழந்து பதினான்குவருடம் வனவாசம் புரிந்ததை மறந்தீர் போலும் நாம் இங்குவந்து சிறையிலிருக்கும் விபரமும் அதுவரை நமதுமந்திரியை ராஜ்ஜியபரிபாலனம் செய்யும்படியாயும் இது விபரத்தை அந்தப்புரஸ்திரீகளுக்குத்தெரிவிக்கும்படியாயும் ஒருகடிதம் எழுதினேன் அதிற் கையெழுத்துப்போடவேண்டும்.

(தே-வ-ம்)—தம்பி! அப்படியே.

---

## ஐந்தாவதுஸீன்

## செஞ்சிக்கோட்டை தர்பார்

(தூ-வ-ம்)—ப்ரபூ வந்தனம்

(ம-வ-ம்) கல்யாண் நீயார்

(தூ-வ-ம்)—நான் டில்லியிருந்து அனுப்பப்பட்டவன்

(ம-வ-ம்)—அப்படியா, வந்த காரணமென்ன எங்களரசனுடைய க்ஷேமமெப்படி.

(தூ-வ-ம்)—தங்களுடைய அரசனும் இளவரசும் சிறையிலகப்பட்டனர் இதோ அவர்களின் கடிதம்

(ம-வ-ம்)—ஆஹா! இது என்னகாலம் நமது அரசனுடைய தேவி அருமையான ஆண்குழந்தை யீன்றெடுத்ததற்காய் நகரதைச்

சிங்காரித்து அரசனது வரவை எதிர் பார்த்துக் கொண்டிருக்க, அவர்கள் சிறையிலிருப்பதாய் லிகிதத்தினுற் றெரிந்தது. ஐயோ அவரின் குழந்தையைப் பார்த்துச்சந்தோஷிக்கக் கொடுத்துவைக் காமல் ஆஹா! என்ன அபாக்கியஸ்தர்களாய் விட்டார்கள் நல்லது சேவகா! இதுவிபரத்தை அந்தப்புரஞ்சென்று ரமதாசபத்தினிக்குத் தெரியப்படுத்துவாய்.

(சே—வ—ம்)—அப்படியே

---

## 6-வது ஸீன்

### அந்தப்புரம் தன்நாயகன் சிறையிலிருப்பதை சேவகனுலறிந்த சுபத்திரை வருந்துதல்.

ஆளிலுந்சாவுதான் நாழிலுந்சாவுதான் என்ற வர்ணமெட்டு.

இராகம்—தேசிகமுகாரி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

அய்யய்யோ நானென்ன செய்வேனினி மன்ன
அருஞ்சிறை புகலானீரோ நாயகா நாயகா நாயகா (அ)

வையந்தனைத்துறந்து தையலெனை மறந்து
வன்சிறைபுகலானீரோ நாயகா நாயகா நாயகா என்றுனமை(அ)

ஒவ்வியுமைப்பிரிந்து எவ்விதமிருப்பது
உயிரினித்தரியாது நாயகா நாயகா நாயகா (அ)

பெருமையெல்லாம் போச்சே அருமைகுலையலாச்சே
பிரியவுங்காலமாச்சே நாயகாநாயகா நாயகா என்னருமை(அ)

பாழுந் தெய்வமிப்படி வாழவிடாதபடி
பவுசுகுலைத்ததோ நாயகா நாயகாநாயகாஎன்னருமை (அ)

ழுவருடம் வரை மீளாச்சிறையிருக்க (அ)
ஞறைசெய்தோம் நாயகா நாயகா நாயகா என்னருமை



(சு—ப—வ—ம்)—ஐயோ! மன்னவா? தாங்களும் சிறையிலிருக் கக்காலம் வந்ததா? ஐயோ என்னை ஒண்டியாகப்பாதவிக்க விட்டு விட்டீர்களே தங்களுக்கு வீரியமும் லக்ஷணமும் பொருந்தியகுழந் தை பிறக்கவும் தாங்கள் சிறையிலிருக்கவுமா பிரமன் எழுதியது ஆகா! நானென்ன செய்வேன்.

(தோழீ—வ—ம்)—அம்மா! எழுந்திருங்கள் வீணே புலம்பிக் கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம் நடப்பது நடந்துதான் தீரும் தாங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம்.

(சு—ப—வ—ம்)—ஹா! என்தோழீ?

தரு.

ஐயையோநானொரு பெண் பிறந்தகதையை என்றவர்ணமெட்டு.

இராகம்—நீலாம்புரி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

என்போல பாக்கியமுள்ள பெண்களையிவ்வுலகில்
எங்கேனுங் கண்டதுண்டோ பிராணதோழீ
கண்ணில்லாதவனிரு கண்பெற்றுடனிழந்த
கதைபோலு மானதடி பிராணதோழீ (எ)

குணமுமழகும் வாய்ந்த குழந்தைதான் பெற்றதையும்
கொண்டாரறியாரே பிராணதோழீ
மணவறைப்பந்தலிலே மங்கல்யத்தையிழந்த
மங்கைபோலானேனடி பிராணதோழீ (எ)

---

## 7-வது ஸீன் நகரம்.

### தேசிங்குராஜன் ஆறுவயதுவரை தன்சிநேகிதனை மௌத்துக்காரனோடு சகலகலைகளையுங்கற்று இருவரும் செஞ்சிக்கோட்டையின் சிறப்புகளைப் பார்த்துக் கொண்டுவருதல்

தரு.

மாசபைபோர் என்றவர்ண மெட்டு

இராகம்—மோகனம்—தாளம்—ஆதி.

பல்லவி.

சீர்பெருகவே சேயனிங்கு நேயந்தங்கு
சிந்தைமகிழ்ந்துமே தந்தனம் வந்தனம் (சீ)
சிந்தைமகிழ்ந் தந்தமுடன் தந்தனிதோ வந்தனங்கள் (சீ)

அநுபல்லவி.

பாருலகில் நேரிலகிய
பாவலர் நாவலர் மேவுகாவலர்
பாங்குட னிங்கு வந்தோங்கு சாரங்கர்க்கும்
பரிவாகவே சிறுவன் வெகு மரியாதையாய் அரிதாகிய (சீ)

(தே—வ—ம்)—மித்ரா! நாம் அநுதினமும் பள்ளிக்குச்சென்று பலகலையுங் கற்றுணர்ந்தோம் தவிர ராஜ கன்மங்களுக்கு வேண்டிய யானை ஏற்றம் யுத்தப்பரிக்ஷை முதலானவைகளையும் கற்றுணர்ந்தோம் ஆனால்

குறள்.

கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.

என்பதுபோன்று நாமெடுத்துக் கொண்ட பிரயாசைக்குத் தகுந்தபலன் கிடைக்கும் மாறு நமது ஆயுள்முழுவதும் முழுப்பாகமும் பரோபகாரமே செய்து வர எனது சிந்தை ஆனால் உனது அபிப்பிராயமென்ன?

(மௌ—வ—ம்)—மித்ரா உனது எண்ணத்திற்கு மாறுபாடாக எனதெண்ணம் எந்தவிஷயத்திலாவது இருக்கக்கண்டனையோ.

(தே—சி—வ—ம்)—இல்லை.

(மௌ—வ—ம்)—ஆனால் எனதெண்ணமும் அதுவே.

(தே—சி—வ—ம்)—மௌத்து கான் வெகுநாளாக எனக்கொரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது அதாவது உலகத்தில் எல்லாக்குழந்தைகட்கும் மாதா பிதாக்களிருக்க எனக்குப் பிதா இல்லை அதன் இரகசியம் உனக்கேதாவது தெரியுமா?



(மௌ—வ—ம்)—மித்ரா எனக்கொன்றுந் தெரியாது ஆனால் உன் தாயாரைக் கேட்டால் அதன் உண்மை வெளிப்படும் கேட்டுப் பார்த்தனையோ?

(தே—வ—ம்)—இல்லை ஆனால் கேட்டறிந்து வருகிறேன் நீயுன் வீட்டிற்குப்போய்வா.

(மௌ—வ—ம்)—உத்தரவு

## 8 வது ஸீன் அந்தப்புரம்.

### தேசிங்குபாலன் தாயாரிடம் போய் தகப்பனெங்கேஎன்று வினவுதல்.

மார்க்கத்திற் கண்டகனிதனக்குள்ள என்றவர்ண மெட்டு.

இராகம்—அடாணா—தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

தாலமதிற்சிறு பாலனெனையீன்ற
தந்தைஎங்கே காணேம்தாயே (அடா)

சுபத்திரை

சிலாவிபரீத காலத்தால் நின்றந்தை
சிறையிலிருக்கா ரென்சேயே

தேசிங்கு.

எந்தப் பயலென்றன் றந்தைதனைச்சிறை
இட்டனன் சொல்வா யென்தாயே (மிக்க)

சுபத்திரை

அந்தமிகுத்துப் பொருந்தியடில்லி
யாசனடா எந்தன்சேயே

தேசிங்கு

என்னகாரணத்தா லன்னவன் எந்தையை
இப்படிச்செய் தனன் தாயே (மத)

சுபத்திரை

பொன்னகரப்பரி தன்னையடக்காமல்
போனதினா லெந்தன்சேயே

(தே-வ-ம்)—என்ன! என்ன!! என்ன!!! புரவியின்மீது ஏறத் திரமில்லாமலா என்றந்தை சிறையிலிருக்கின்றார் நல்லது ஆனால் எத்தனை வருடமிருக்கும்?

(சு-ப-வ-ம்)—பாலகா! ஆறுவருடமாயிற்று இன்னம் ஒரு வருடத்தில் நின்றந்தை நின் சிறியதகப்பனோடு வந்துவிடுவார்.

(தே-வ-ம்)—அப்படியா சிறியதகப்பனுருமா சிறையிலிருக்கின்றனர் நன்றாயிருக்கிறது நீயேன் இதுபரியந்தம் என்னிடம் சொல்லவில்லை போகட்டும்

தரு பார்வதி.

மைபுலாவோரே சுந்தரியான் ரங்கபாநவேஷ என்ற மெட்டு.

இராகம்—இந்துஸ்தான்பியாகு—தாளம்—ரூபகம்

போய் வருகிறேன் அந்தப்புரவி திறமறிய (போ)
தாயேமகிழ்ச்சியுறத் தாரணியிற்கீர்த்திபெற
மாயப்பரியேறி மாயப்பரியேறி நான்
வருகுவேன் சவ்வாரி (போ)

சுபத்திரை.

கொஞ்சுங்குழந்தாய்சற்றுங்கூசாமலேன்துணிந்தாய்
அஞ்சுவயதாக வில்லை அறியாதசிறுபிள்ளை
வஞ்சமிலாதாலே வஞ்சமிலாதாலே இந்த
வார்த்தைசொன்ன யென்பாலே (கொ)

தேசிங்கு.

எந்தை சிறையை மீட்டி எங்குமென்புகழைநாட்டி
வந்திடுவேன் சென்றுநல் வரமருள் நீயின்று (போ)

(தே-வ-ம்)—அம்மா, இதுவிஷயத்தில் நீ தடைசெய்யவேண்டாம்நான் அந்தடில்லிக்குச்சென்று* அங்குள்ள புரவியின்மீது சவாரிசெய்து அந்தடில்லியரசனுடைய கர்வத்தையுமடக்கி என்றந்தையையும் சிறைமீட்டி வருவேன் உத்தரவுகொடும்.

(சுப-வ-ம்)—கண்மணீ! நீயோ சிறுகுழந்தையா யிருக்கிறாய் அநேக திடம்பொருந்திய ராஜ ராஜாக்களையெல்லாம் மோசப்படுத்திய அந்தப்புரவி, உன்னை நாசப்படுத்திவிடும் ஆகையால் இதை சொற்பனத்திலுமெண்ணாதே.



(தே-சி-வ-ம்)—தாயே! அப்படிச் சொல்லக்கூடாது கட்டாயம் நான் போகவேண்டும்.

சுபத்திரை தரு பார்வதி.

திருச்சின்ஜாரியர் என்றவர்ண மெட்டு

இராகம்—தர்பார்—தாளம்—ஆதி.

மாசிலா பாலகா மாறாத செல்வமே வா கோடி
மாதவத்தால் வந்த மாரா உன்னால்
மாமீதேறமுடி யாதடா (மா)

தேசிங்கு.

புரவியிலேறியிங் குறுவேன்ஜெயித்து நீ போ அம்மா
பூமகளே டில்லி போக யரி
பூரணமா யொப்புவா யினி (பு)

சுபத்திரை.

குலத்திற்பிறந்த வென் குழந்தாய் சிகாமணி வா மனங்
கூசாமலிவ்விதங் கூற லாமோ
கூடாதுன்னாற் புரவி யேறவே (மா)

பஜாயுமேதில்பேறு கௌறுசே என்ற பார்ஸீ வர்ணமெட்டு.

இராகம்—இந்துஸ்தான்பியாகு—தாளம்—ஆதி.

(சுபத்திரா)—போனால் மோசம்வருமென்சேயே நீ போ ஜெயம்
(தேசிங்)—பொங்கிய தேசிங்கு பாலன் நான்றாயே நீ (போ)
(ஷை)—வாணாள் முழுதும்வெற்றிவாங் கவல்லோ நான்பிறந்தேன்
சுப—வாதுவேண்டாமுன்னாலென் மன்னவனை நான்மறந்தேன்
தே—வாடாதே எந்தன்றந்தை வந்துசேரச்செய்வேனே
சுப—வருவாரினியிரண்டு வருடந்தனிலே தானே
தே—வந்தாலது பெருமை வருமோ சொல்வா யென்னம்மா
சுப—வரவேண்டாமப்பெருமை வம்புசெய்யாதே சும்மா
தே—வையந்தனி லென்னம்மா எய்வேன் புகழ் நீ சும்மா
வாகுடன்போகச்சொல்வாய் தாயே நீ (வா) (போ)

(தே-வ-ம்)—தாயே! இதுவிஷயத்தில் மாத்திரம் தடைசெய்ய வேண்டாம் மனப்பூரணமாய் உத்தரவு கொடுக்கவேண்டும்.

(சுபத்திரா)—கண்மணி! அப்படிச் சொல்ல வேண்டாம் நீயோ சிறுகுழந்தை உன்னுடைய சந்தோஷப்பெருக்கினால் உன்தகப்பனை மறந்தேன் நீயும் பிரிந்தால் என், உயிர்தரியாது.

தேசிங்கு தரு

வர்ரிகனுவனஜோபனு என்ற வர்ண மெட்டு.

இராகம்—இந்துஸ்தான்பியாகு—தாளம்—ஆதி.

தாயேஎது தடைசெய்ய துவிடைதந்தருள்வா
யுகந்திப்போது தாயேஎது

(சுபத்திரா)—சேயே வீண்வாது செய்வதாகாது
தெய்வலோகப்புரவி பொல்லாதது

(தேசிங்)—என்னைக் கொல்லா தது என்ன
(சுபத்திரா)—மல்லா யிது நல்ல
(தேசிங்)—சொல்லா யிது

(சுபத்திரா)—செப்புமொழி கேட்பாயே
(தேசிங்)—தப்பியென் சொல் லேற்பாயே
(சுபத்திரா)—சேருமே ஆபத்து
(தேசிங்)—பாருமென் சமர்த்து
(சுபத்திரா)—செல்வ நீ போகாதே
(தேசிங்)—சொல்வது மாகாதே
(சுபத்திரா)—தெரிப்பிரிந்தறியா மங்கை நானல்லோ நல்ல
(தேசிங்) தீரம்பொருந்திய சிங்கு நானல்லோ
தியங்கிடாதே நீ மயங்கிடாதே
சீக்கிரம் நான்வருவேன் செல் செல் செல்

(சுபத்திரா)—ஒருசெய்திசொல்லுவேன் சற்றுநில் நில்நில்
(தேசிங்)—நீ செல் செல் செல்
(சுபத்திரா)—சற்று நில் நில் நில்
(தேசிங்)—என்ன சொல் சொல் சொல்
(சுபத்திரா)—சீராளா தர்க்கஞ்செய்யாதே நீ (தா)

---



148170

பிடித்துக்கொள்ளல்.

தரு

பூமிமெச்சிடும் அண்ணுமலை யென்ற காவடிச்சிந்து வர்ணமெட்டு

இராகம்—இந்துஸ்தான் காப்பி—தாளம்—அடதாளம்.

தந்தை தாய்க்குதவா மைந்தனைப் பிறந்தென்
சாரமே யிந்த நேரமே யுபகாரமே செய்து
தாயே நான் வருவேன் நீயேனிங்குற்றாய் விசாரமே
இதுவென் பாரமே (௬)

சுபத்திரா.

ஏந்தும் பாலாவாயில் மோந்தபாலுந்தோய
இல்லையேவேண்டாந்தொல்லையே கேளென்சொல்லையே ஐயோ
எந்தனுக்குனைப்பிரிந் திருக்கமனம்வில்லையே
கேளென் சொல்லையே

தேசிங்கு.

சந்ததியிருந்தும் தந்தையர்க்குதவா
தாகுமா இதற்குள்சோகமா இதுவும் யூகமா-அம்மா
சத்திரியகற்கு லத்துதித்தும்வீரம் போகுமா
இதென்ன வாகம்மா

(சுபத்திரா)

பருவமிங்குனக்கு வருமுனேனதற்கி
வாதடா வரும் தீதடா இதுதகாதடா—டில்லி
பாராச்சாரிமீது ஏறவீரமுனக்கேதடா
எனிவ் வாதடா (௭)

(சு—ப—வ—ம்)—கண்மணி! டில்லிபாதுஷாவோ ரொம்பவும் வாதுக்காரன் மேலும் அவனிட மிருக்குங் குதிரை மிகவும் பராக்கிரமத்தை யுடையது ஆகையால் நீ போகவேண்டாம்.

தரு.

அருமாமறையே என்ற வர்ணமெட்டு.

இராகம்—பிலகரி—தாளம்—ஆதி.

பல்லவி.

தே—சி)எந்தவிதத்திலும் வந்திடுவேன் ஜெயித்
திங்கணமெனைவிடு தாயே

அநுபல்லவி.

இகழும்பாழும் புகழும் படியே
இதுவொருபெரிதல விறையவனருளினால்

ஜோடி மெட்டு
பல்லவி.

(சுப)—இத்தனைபுத்தியு ரைத்துமறுத்தனை
இனியிங்குனைவிடேன் சேயே

அநுபல்லவி.

இளமும் கனமும் இறையோனருளும்
இருந்தலோ இகமதிலெனுஞ் செயமடையலாம்

சரணம்.

(தே—சி) தந்தைசிறையினி லந்தோ விருந்திட
தனயனுஞ்சுகம் பெற லாச்சு ஐயோ
தாரணியுளவரை பேரணிநங்குலந்
தானுறமேபெரு மேச்சு
எந்தனுக்கந்த மிருந்துபொருந்திடு
மிருபுயபலமெங்கே போச்சு
ஏதினிவாதிது போல நீ பேசாதே
இனமொருதரமிந்தப் பேச்சு அம்மா
ஏனுனக்கிப்பெரு மூச்சு இதா
லென்னகுடிமுழுகிப் போச்சு (என்)
(சு—ப) மத்தகமதகரி யொத்தபரியிலேறி
வலம்வரவுன்றனென்ன கூடும் (அடா)
வருவதையறியாத சிறியபருவமுள
மதலா யுந்தனைக்கொன்று போடும் நான்
செததாலும் நீ போக ஒத்துக்கொள்ளேனையோ
சிரிக்குமே யெனை யிந்த நாடும்
சிலனே உனைப்பிரிந் தாலதினாலெந்தன்
சித்தம் மிகவும் நொந்து வாடும் உயிர்
சீக்கிரமெனைவிட்டு ஓடும் ஐயோ
எமக்கத்தனை பாடும் [இத்]



## விடுவித்துக்கொள்ளல்.

இப்படித்தடுக்கலாதமோ என்ற வர்ணமெட்டு.
இராகம்—மோகனம்—தாளம்—ஆதி.

பல்லவி.

அற்பமாய் நினைப்பதாகுமா அம்மா அம்மா அம்மா (அ)

அநுபல்லவி.

சொற்பனம்போலுமித் தாலம் எவர்
சொந்தமாகுமிந்தக் காலம்
இப்ரபஞ்சத்திலிருந்தனு கூலம்
எந்தைக்கிடுவதினாலென அலங் கோலம் (அ)
ஆவத்திலுதவாத பிள்ளை இருந்
தாவதென்னபெருந் தொல்லை
சாவதுஇன்றைக்கும்நாளைக்கு மெல்லை
தானிதற்குண்டோவேறிந்திட வில்லை
தந்தையிருப்பிடமே சென்று சிறை
தானேமீட்டிடுவே னின்று
சிந்தைமயங்குவதேனோ நீ வென்று
ஜெயமுறுவேன்சிறுகுழந்தையா னென்று (அ)

(தேசி—வ—ம்)—தாயே என்னை ஏதோ க்ஷத்ரியகுலத்துதிவனென்றெண்ணாமல் அற்பமாஎண்ணி வார்த்தையாடுகிறாய் வேண்டாம் யான்சென்று என்தந்தையினது சிறையைமீட்டி நானும் தந்தையுமாயிவடம் வந்துசேருகிறோம் நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் நான் சென்றுவருகிறேன்.

போகுதல்.

## தேசிங்கு போனதின்பின் சுபத்திரை வருந்துதல்

அப்பா மகனே பாம்புஎன்றவர்ணமெட்டு.
இராகம்—முகாரி—தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

அப்பாமகனே சிங்கு அய்யாமகனே சிங்கு
ஆவிபதருதடா மகனே மகனே தேசிங்கு (அ)

இப்பாரினிற் கொடிய துற்பாக்கியத்திலுடைய
என்போலொருவருண்டோடா மகனே மகனே தேசிங்கு (அ)

உயிரோடுனையிழந்தேன் உடையானையும் பிரிந்தேன்
ஓரியாய்ப் போனேனடா மகனே மகனே தேசிங்கு (அ)

(தே-வ-ம்)-அடாகண்மணி! என்னையிப்படி மோசஞ்செய்யவு மனம் வந்ததா ஐயோ, உன்னைப் பிரிந்து நான் எப்படிடா உயிர் தரிப்பேன் ஐயோ, அறியாத குழந்தைப் பருவத்தை தகாதகாரியத்தைச்செய்யத் துணியலாமா உன்னை எப்பொழுதடா காணப்போகிறேன் ஆ! ஆ!!

## 9-வது ஸீன் நகரம்.

(தே-வ-ம்)—மித்ரா, மித்ரா, மௌத்துகான் வா

(மௌ-வ-ம்)—தேசிங்கு ஏன் இவ்வளவு அவசரம் என்னஉன் மனது பதைக்கின்றது (நெஞ்சைத் தொட்டுப் பார்த்தல்) உன்னை யார் என்னசெய்தார்கள்.

(தே-வ-ம்)—ஒன்றுமில்லை

தரு.

ஆவல பாவல ஜாவோ என்ற பார்ஸி வர்ணமெட்டு.

இராகம்—தர்பார்—தாளம்—ஆதி.

ஏகுவோம் ஏகுவோம் வாராய் நிறை
என்னுடன் கூடும் டில்லி மாநகர் (ஏ)
எந்தை சிறையிலே அந்தநகரிலே
இருக்கிறாரா மொரு புரவியாலே அதி
லேறி இப்பாரிற் சவாரியே செய்
திங்குழலக்கக் கொண்டாருவோம் (ஏ)

(தே-வ-ம்)—செல்சீக்கிரம் தாமதம் வேண்டாம்

(மௌ-வ-ம்)—மித்ரா இப்பேர்ப்பட்ட விஷயம் எப்பொழுது வருமோவென்று காத்துக் கொண்டிருந்தேன் தவிர நமக்கேற்பட்



டிருக்கும் சாமர்த்தியத்தை பிறர்மூலமாயறிய வேண்டுமே தவிர நாமே தெரிந்துகொள்ள மார்க்கமில்லை ஆகையால் ஜல்தி செல்வோம் வா

இருவருமபோகுதல்.

## 10-வது ஸீன் டில்லி தர்பார்.

தேசிங்கு தரு.

தாடி நரைத்தாலும் என்ற வர்ணமெட்டு.

இராகம்—மால்கோஸ்—தாளம்—ரூபகம்.

எங்கும் புகழ்பெற உங்களிடத்திலோர்
துங்கப்புரவி துலங்குதாமே
இங்கதன்மேலே சங்கையில்லாமலே
ஏறிச்சவ்வாரியே செய்யவந்தோம் (எ)

செஞ்சிக் கோட்டையாளுந் தேரணிசிங்குமக்
கஞ்சிச்சிறையிலமர்ந்ததினா ல்
மிஞ்சுமந்தச்சிறைமீட்டிச்செல்ல வந்தோம்
மேதினிமீதினில் மேன்மையுட ன்

(தே-வ-ம்)—ஹோ! டில்லியை ஆளப்பட்ட அதிபதி! வந்தனம்

(டி-சு-வ-ம்)—பாலகா! நீ யாவன் உன்பெயரென்ன உங்களிருப்பிடம் எது இவ்வளவு பதட்டத்தோடு வந்துஎங்களிடமிருக்கும் குதிரையில் ஏறவேணுமென்று கேட்கும் காரணமென்ன சொல்லுவாய்.

(தே-வ-ம்)—அரசே நாங்களிருப்பது செஞ்சிக் கோட்டை என்தகப்பனார் பெயர் தேரணிசிங்கு என்சிறியதகப்பனார் தரணிசிங்கு இதோ என்னுடன் வந்தவன் எனது சிநேகிதன் எனது தந்தையர்கள் ஏதோ புரவியேறத் திறமில்லாமல் உம்மிடத்தில் ஏழு வருஷம் சிறையிலிருப்பதாய்த் தெரியவந்தது ஆகையால் அவர்களினது சிறையை மீட்டி உங்களிடமிருக்கும் சாமர்த்தியம் பொருந்

திய குதிரையை யடக்கிஉங்களையும் எங்களுக்குக் கப்பங்கட்டும் படியான வாக்கு நிச்சயத்தையுங்கைக் கொண்டு போகவந்தோம் ஆகையால் அப்புரவியைக் கொண்டு வாருங்கள் ஜல்தி.

(டி—சு—வ—ம்)—பாலகா! அந்தப்புரவியேற உன்னால்முடியாது நீ இவ்வளவு சிறுவனாயிருந்தும் உனக்கு இவ்வளவு தைரியம் வந்ததைப்பற்றி நான் சந்தோஷித்தேன் ஆகையாலுன் தந்தையர்களிருவரையும் விடுதலையாக்குவேன் கூட்டிக் கொண்டு போகலாம்.

---

தேசிங்கு தரு.

**அநுமாமறையே என்றவர்ணமேட்டு.**

இராகம்—பிலகரி—தாளம்—ஆதி.

இந்தவிரக்க மிருந்திடி — லிங்கன்
மெந்தையைச் சிறையிட — லாமா
அந்தநற்கந்துகத் — தடல்தெரியாமலே
அழைத்துக்கொண்டேகுத — லதுபெரிதாமா (இந்)
கற்பகநாட்டிலிருப்ப — வரும்மனங்
கலங்கிடவே பரி — ஏறி — இந்தக்
கடலடுபுடவியில் — நொடிபடவருகுவேன்
காட்டுமோதிரமெனை — மீறி — அது
ககனமுறு மோயெனைக் — கோறி — அதின்
கருவமடக்குறேன் — சீறி (இந்)

(தே—வ—ம்)—அரசே எங்களதுக்ஷத்திரிய குலத்துக்கு அது பெருமையல்ல தாங்கள் எந்தவைராக்கியத்தைக் கைக்கொண்டிருந்தீர்களோ அதையே நாங்கள் சாதித்து வெற்றியடைந்து போவதுவே சிலாக்கியம் அப்படி முடியாவிட்டால் நாங்களுஞ் சிறைக்குள்ளாவோம் ஆகையால் குதிரையிருக்குமிடம் எது தெரிவிப்பீர்.

---

## மௌத்துகானல் பாராசாரியைக் கொண்டுவர தேசிங்கு அப்புரவியிலேறி நகரை மூன்று வலம்வருதல்.

தரு.



**நித்திரையே நமஸ்கார்ம் என்றவர்ண மேட்டு.**

இராகம்—காப்பி—தாளம்—ஆதி.

ஏறிச்சவாரி — செய்தேனே
உலகெங்கினும் புகழ்பெறத்தானே — நானே (ஏ)
மீறுமிப்புரவியின் — மேலிந்தப்போது
மின்னற்றுலங்குதல்போ — லுன்னியஞ்சாது
நீரும் பொருந்தியதோர் — நீள் புவிமீது
நெடியகுவடுமுத் — லிடியவே சாது (ஏ)

(டி—சு—வ—ம்)—சஹபாஷ் பாலகா அமருவாய் உன்னையானொருதெய்வ அம்சமென்றே எண்ணினேன்! நீமிகவும் பராக்கிரமசாலி ஆனால் வாக்குப்படி நானும் உனக்குக்கப்பங்கெட்டிவர நீ செஞ்சிக் கோட்டையை யாளுவாய் உன்விபரம் உன் தந்தையர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறேன் வருவார்கள் மற்றைய அரசர்களையும் சிறையினின்றும் விடுவித்திருக்கிறது மௌத்துகான்! அமரும். உமக்கு என்பட்டத்துக் குதிரையான நீலவேணியை இனாமளித்தேன்.

(மௌ—வ—ம்)—அப்படியே.

---

## தோணிசிங்கு தனது புத்திரனைக் கண்டு சந்தோஷித்தல்

**சித்ரப் பச்சைக் கச்சைக் கட்டி என்ற வர்ணமெட்டு.**

இராகம்—அடாணா—தாளம்—ரூபகம்.

திரடி.

எத்தனை புத்ரசம்பத்தையுடைத்தென்னபாக்யம்நின்போ
லேகமகனுறுயோகவா — னேசிலாக்கியம்(எத்)
இத்தரையிலெனை — வைத்த சிறை மீட்டி
எங்கும் புகழ்பெற — தங்கப்பறியோட்டி
ஒத்தபுயதிட — சித்தமதைக்காட்டி
ஒருவீரனாய் வருபாலனே திருமாலருள் பெறுசீலனே(எத்)

தயரதலம்சந்தழைக் கவந்து புவிமேலே ராமன்
சானகிபட்டிழல் தன்சிறை மீட்டினைப்போலே
புயவலியாலே பொருந்தவிக்காலே
புரவியின்பாலே போர்செய்ததாலே
புவனக் கடலுங்கதர ககனத்திடமும்திர
புரவலவென் றுயர் திர்த்தாய்
வரையறு கற்புகழேர்த்தாய் (எத்)

(டி—வ—ம்)—அய்யா தங்களுக்குப் புத்திரனை தேசிங்கு பாலன் இவிடம் டில்லியின்மீதுள்ள பாராசாரியின் மீது ஏறிஜெயம்பெற்றானென்று மற்றத்தேசத்தரசர் களுக்குத் தெரியப்படுத்துவ தோடு அவனது ஜெயத்தைப்பற்றியே அவனுக்கு இவ்வூரிலே விவாசஞ் செய்யவேணுமென்ற அபிப்பிராயம், தங்களது இஷ்டமென்ன.

(தே—வ—ம்)—ப்ரபூ! தங்களதுசம்மதமெப்படியோ, அப்படியே

(டி—வ—ம்)—ஆனால் தங்களது வம்சத்தில் நமது தேசிங்குக்குத்தகுந்த பெண்பார்க்கப் பிரயத்தனப் படுங்கள்.

(தே—வ—ம்)—ப்ரபூ ஆதியில் இந்ததேசிங்கு பிறப்பதற்கு முன்னமே என்வயிற்றில் ஆண் குழந்தை பிறந்து உங்களதுவயிற்றில் பெண் குழந்தை பிறந்தால் சம்மந்தம் பண்ணிக் கொள்ளுகிறதென்றும் அல்லது உங்கள் வயிற்றில் ஆண்குழந்தை பிறந்து என்வயிற்றில் பெண்குழந்தை பிறந்தாலும் அப்படியே செய்துகொள்ளுகிறதென்றும் மாளவதேசத்தரசனோடு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறேன் அன்னவருக்கு ஒருபெண்குழந்தை உண்டும்

(டி—வ—ம்)—அப்படியா ரொம்பவும் சந்தோஷம் மந்திரி! ஜெயம் பெற்ற தேசிங்குபாலனுக்கு இந்த ஊரில் விவாகமென்று மற்றய தேசத்தரசர்களுக்கு அறிக்கையிட்டு வரும்படி செய்வாய்.

(ம—ரி—வ—ம்)—உத்தரவு.

---



## மாளவதேசத்தரசன் புத்திரிக்கும் தேசிங்கு பாலனுக்கும் டில்லியில் விவாகம் நடக்குதல்,

தேசிங்குதரு.
நித்திரையே நமஸ்காரமென்ற வர்ண மெட்டு.
இராகம்—காம்போதி—தாளம்—ஆதி.

திருமணம்புரியப்பெற்றேனே சிதேவியான
சிறுபாவையை நானே (தி)

மருமணவதிஇவள் மோகவுய்யாரி
மாளவதேசத்து மகிபகுமாரி
பெருமணங்காமலி பிறர்க்குபகாரி
பேசுமிவளெனக் குகந்தநற்பாரி (தி)

மங்களவதிதிருமகள் புத்திசாலி
மானிலத்தனிற்கற்புக் கிவளொருவேலி
கொங்குமலிந்திலகு குணவதிசீலி
கொண்டிவள் கழுத்தினிற் றரித்தேன்பொற்றாலீ (தி)

## தேசிங்கு பாலனுக்கு விவாகம் முடிந்த பின் தம்பதிகளுடன் செஞ்சிக் கோட்டைக்கு வருதல்.

## 11-வது ஸீன்
## செஞ்சிக்கோட்டை,

(தே—வ—ம்)—தாயே நமஸ்கரிக்கிறேன் நான்போகுங்கால் பல விதத்திலும் வேண்டாமென்று தடுத்தனை அப்படியே நான்சம்மதித்திருப்பேனானால் நமக்கு இவ்வளவு கீர்த்தியும் பெருமையுங் கிடைக்குமா? என்ன?

(சுப—வ—ம்)—கண்மணி!

### குறள்.

ஈன்றபொழுதிற்பெரிதுவக்குந்தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்

என்ற முது மொழிக்கிணங்கி நான்உன்னைப் பெற்றெடுத்த தருணம் அடைந்த சந்தோஷத்தைப் பார்க்கிலும் இப்பொழுது புகலொணாத சந்தோஷமடைந்தேன். நாதா அடியாள் வந்தனம்

(தே—ர—வ—ம்)—கல்யாண சுபத்திராஏதோ நாம்செய்த அருந்தவத்தினால் நமக்குகிடைத்த புத்திரன் எங்களது சிறையைமீட்டத் தலைப்பட்டான் இதுபற்றியே,

### வெண்பா.

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடையரேனும் முடையரோ—இன்னடிசில்
புக்களையுந்தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களை யிங்கில்லாதவர்

என்பதாய்க் கூறப்பட்டிருக்கிறது ஆனால்இப்பேர்ப்பட்ட புத்திரபாக்கியத்தை நாம் பெறாமல் எவ்வளவு சம்பத்தையடைந்திருந்தாலுமென்ன சிலாக்கியம்

(சு—ப—வ—ம்)—நாயகா அதுவாஸ்துவமே.

---

## தேசிங்கு பாலனுக்கு பதினாறு வயதான தும் முடி சூட்டுதல்.

### தரு.

தாஜராஜ என்ற வர்ணமெட்டு.
இராகம்—தேசிக தோடி—தாளம்—ரூபகம்.

மாமகுடஞ் சென்னியேற்றான் மகிழுறவிங்கு இந்த
மானிலத்து மந்தவானிலத்தும் கீர்த்திவாய்ந்த தேசிங்கு (மா)
மங்களகுணகரன் சங்களதினகரன் மகமேருபுயத்தான்
வரு மொரு பொருமுனை . தனிலொருவிறையென
வம்முரு ஜெயாயத்தான் சிறு



வடுபடுகொடிமுடியிடு கடையரையெல்லாம்
வதைபுரி யதிசயத்தான்
வானேரேற்றப்புலால் வீசிய வாள்வேற்கரமுடையான்
வசையறுமறநடையான் வகையுறுபெருங்குடையான் (மா)

(தே—வ—ம்) மித்ரா

(மௌ—வ—ம்) ப்ரபூ

(தே—வ—ம்) இந்தராஜ்ஜியத்தினின்று சிலபாகம் பிரித்துஅதில் உன்னைராஜனுயமைத்து அரசாக்ஷிசெய்து வரும்படி நான் சம்மதித்துக்கொண்டபடியால் இதற்கடுத்த வழுவாஊரென்று வழங்கி வருகிற சத்தியபுரியில் யாதொரு ஒழுங்குந்தவறாது அரசுபுரிந்து வருவாய்.

(மௌ—வ—ம்) அப்படியே

## 11-வது சீன்
# ஆர்க்காட்டு நவாப்பு
### தர்பார்

தாஜராஜ தர்ஜராஜ என்ற வர்ணமெட்டு.
இராகம்—தேசிகதோடி—தாளம்—ரூபகம்

வந்திருக்குமந்தகாச மாசபையோரே சிறு
மைந்தனும் வந்தனம் தந்தனம்ந்தமாய் மகிழுறுவீரே
மங்களம்பெருகவே இங்குள்ள கவிஞர்கள்
மகபெரியோர்கள் முன்னே
மதலையான்குதலைவாயொடு ஒருபனுவலை
மதியுளன் போற்சொன்னேன் நம்
மனதினிலெனகுறை எனதிடமிருப்பினும்
மன்னிப்பீ ரின்னே
மன்றில் நின்று நானேகேட்கும்
மனுவொன்றிதுதானே அருள்வீரதுதானே
பெறுவேன்கனந்தானே (வந்)

(நவா—வ—ம்) சேவக்
(சே—வ—ம்) ப்ரபூ வந்தனம்
(நவா—வ—ம்) அடே நமது மந்திரியை அதிசீக்கிரமழைத்துவா
(சே—வ—ம்) உத்தரவு.

தரு

சும் சும் சும் பியாரி என்ற வர்ணமெட்டு.

இராகம்—இந்துஸ்தான்—தாளம்—ஆதி.

பல்லவி.

தமியேனுமையே பணிந்தேனே
தருபொருதிருவரு அவைதனிலொருசிறு(தமி)

அநுபல்லவி.

எமையே கண்பார்த் தருள்வீரறியோ
மிலக்கணமிலக்கிய மினதெனத்தெரியோம்
இங்கிதசங்கீதமிலா வெங்கவியாற்றுங்கமுற
இக்ஷணத்திலே பக்ஷமுறவே
அச்சத்துடனே மெச்சிப்புகல(தமி)

(மந்—வ—ம்)—ப்ரபூ நமஸ்கரிக்கின்றேன்
(நவா—வ—ம்)—கல்யாண் பிரதான் அமரும்
(மந்—வ—ம்)—உத்தரவு
(நவா—வ—ம்)—மந்திரீ! பாருங்கள் நமது ராஜ்யத்தைப்பற்றி முக்கியமான சிலவிஷயங்களை தங்களிடத்திலின்று கேட்டுதெரிந்து கொள்ளலாமென்று அபேக்ஷித்தேன் தமது இஷ்டம் யாது
(மந்—வ—ம்)—ப்ரபூ நாங்கள் எந்தவிஷயத்தைப்பற்றிக் கேட்கி றீர்களோ அந்தவிஷயத்திற்குத் தகுந்த விடையளிக்கத் தயாரா யிருக்கிறேன்.
(நவா—வ—ம்)—அப்படியானால் சந்தோஷம்

தரு

இந்தக்கிழவனுன்னை என்ற வர்ணமெட்டு.

இராகம்—கானடா—தாளம்—ஆதி.

மந்திரியே நகரில் மாதமும்மும்மாரி
வருஷித்து வருவதிற் குறையேதுமிருக்குதா



மந்திரி.

எந்தனருமைமிகு ஏந்தலேகுறைவின்றி
எங்கினும் மாரிபெய்து பொங்கியதுசெல்வமே

அரசன்.

வேதாகமப்படி என்ற வர்ணமெட்டு.

இராகம்—பியாக்—தாளம்—ஆதி.

நான்கு வருணத்தாரும் நவிலுமுறைப்படியே
நடந்து வருகிறாரா

மந்திரி.

வான்புகழுமரசே வரைகடவா நடந்து
வருகிறாரவ ரவரே

அரசன்.

இந்தக்கட்டையை என்ற வர்ணமெட்டு.

இராகம்—இந்துஸ்தான் தோடி—தாளம்—ரூபகம்

அன்னசத்ரந்தனிலன்னம் அருதிகட்குமந்திரி
நன்னயத்துடனுண்ணச்செய்தல் நவிலுவாய்தந்திரி

மந்திரி.

தருமசத்ரந்தனில்வந்தோர்க்கு தடையிலாமலே அரசே
தருவதிலொரு குறைவுமில்லை தரணிபுகழென்னரசே

அரசன்.

தும்பினமோரி என்ற வர்ணமெட்டு.

இராகம்—மால்கோஸ்— தாளம்—ஆதி.

சிற்றரசர்நமக்குச் சேரும்பகுதிகளை
செலுத்தியே வாரார்களா

மந்திரி.

கொற்றவனே செஞ்சிக் கோட்டையரசன் மட்டும்
கொடுக்கத்தவறி வாரானே

(நவா—வ—ம்)—மந்திரீ செஞ்சிக்கோட்டையை யாளும் தேரணி சிங்கா நாளது வரை நமக்குக்கப்பஞ் செலுத்தவில்லை
(மந்—வ—ம்)—ஆம்
(நவா—வ—ம்)—அவன் எத்தனை வருஷமாய்க் கப்பங்கொடுக்கத் தவறினன்

36 தேசிங்கு ராஜன் சரித்திரம்.


(மந்—வ—ம்)—பதினேழு வருஷமாக அவனது பகுதி நமக்குக் கிடைக்கவில்லை.

(நவா—வ—ம்)—அப்படியானால் இதுபரியந்தம் ஏன் என்னிடத்தில் தெரியப்படுத்தவில்லை

(மந்—வ—ம்)—சமுகந்தெரியப்படுத்தசாவகாசம் கிடைக்கவில்லை

(நவா—வ—ம்)—என்ன புத்தியினால் சாவகாசக்கிடைக்கவில்லையென்று சொல்லவந்தீர் அடேசேவக் நமது சேனைசைன்யனை தோன்றமல்லனை அதிசீக்கிரத்தில் வரச்செய்

(சேவ—வ—ம்)—மகாராஜ உத்திரவு

தோன்றமல்லன் வருதல்.

முதலில்லாயாபாரக்காரன் என்ற வர்ணமெட்டு.
இராகம்—தேசிககாம்போதி—தாளம்—ஆதி.

மகாராஜன்படைக்கு முதல்வீரன் தோன்ற
மல்லன்புயபல கெம்பீரன் (ம)
மாயன் மிகுந்தசம்பிரதாயன் அடல்மிகுந்த
நேயன்பொருமுனை சகாயன் இந்த
மானிலத்தோர் புகழும் [illegible] (ம)

(தோ—வ—ம்)—மகாராஜ் வந்தனம்

நவா—வ—ம்)—கல்யாண் தோன்றமல்லாநமதுசெஞ்சிக்கோட்டையை அரசுபுரியும் தேரணிமகாராஜன் பதினேழுவருடம் வரை நமக்குப் பகுதி செலுத்தவில்லை அதுவிபரம் எனக்கு இப்பொழுது தான் தெரியவந்தது நீயவிடத்திற்குச் சென்று இவ்வளவுகாலம் வரை பகுதி செலுத்தாத காரணமென்னவென்றும் அதுவிஷயத்தில் நவாப்புமிகுந்த கோபமடைந்திருக்கிறாரென்றும் தெரியப்படுத்தி உடனே பகுதிப்பணங்களைக் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்து நீ வந்துசேரவேண்டியது.

(தோ—வ—ம்)—அப்படியா ஆனால் ஒருவிண்ணப்பம்.

(நவா—வ—ம்)—என்ன?



(தோ—வ—ம்)— அவன் ஏதாவது ஆக்ஷேபனை செய்கிறதாயிருந்தால்

(நவா—வ—ம்)—அடே! அப்படி ஆக்ஷேபனை செய்வானென்றகுறி அறிவதற்குள் நின்கரத்திலிருக்கும் வாளால் இருதுண்டாய் வெட்டி சிரசைக்கொண்டுவா போ.

(தோ—வ—ம்)—உத்தரவு.

12-வது ஸீன்

செஞ்சிக்கோட்டைதர்பார்,

(தோ—வ—ம்)—யாரது சேவகன்.

(சே—வ—ம்)—யாரது கேட்கிறது.

(தோ—வ—ம்)—ஆற்காட் நவாபினலனுப்பப்பட்ட தோன்றமல்லன் வந்திருப்பதாய் உமதரசனுக்குத் தெரியப்படுத்து

(சே—வ—ம)—உமதரசன் தர்பாரிலில்லை வரும் வேளையாயிற்று என்ன காரணம்!

(தோ—வ—ம்)—அடே பதினேழு வருஷம் வரை எங்களுக்குச் செல்லவேண்டிய பகுதிப்பணத்தைச் செலுத்தாமல் இந்த ராஜன் மிதமாயிருந்தது என்னநீதி இப்பேர்ப்பட்ட அரசனை என்னசெய்தால்தான் தகாது என்கரத்திலிருக்கும் கட்கத்தால் இருதுண்டாக்கவும் என்மனம் வருகிறது சீக்கிரம் உமதரசனுக்குத் தெரியப்படுத்து.

(சே—வ—ம்)—ஐயோ தோன்றமல்லரே இந்தசமாசாரம் தேசிங்குராஜனிடத்திற் சொல்லாதுநீரோ துலுக்கர்எங்களரசன் விஷ்ணுபக்தியுள்ளவர் உமதுநெற்றியில் நாமமில்லாமல் அவரின் கண்ணில் புலப்பட்டால் அவரினது கட்கந்தான் உம்மை மரியாதை பண்ணும் உமது உயிரை வெறுத்தால் மாத்திரம் நாமமில்லாமற் போகலாம் அதிலும் கப்பம் கிப்பம் என்றும் நவாபினால் அனுப்பப்பட்டேனென்றும் சொல்லிவிடாதேயும்.

(தோ—வ-ம்)— (தனக்குள்) ஞாயந்தான் தேசிங்கினது திறமையை நாமென்ன கண்டோம் இவனிடங்கப்பங்கேட்க வந்ததேபிசகு ஆனால் நாமமிட்டுக்கொண்டாவது அவனைப் பார்த்துவிட்டுப்போகலாம்.

(நாமமிட்டுக் கொள்ளுகிறான்)

(தோ—வ—ம்)மகராஜ் வந்தனம.

(தே—வ—ம்)—கல்யாண் ஸீயாவன்.

(தோ—வ—ம்)—நான் ஆற்காட் நவாப்பினு லனுப்பப்பட்டவன் தாங்களேதோ பதினேழுவருஷம் கப்பஞ் செலுத்தவில்லையென்றும் அதைக்கொண்டுவரும்படியாயும் தெரியப்படுத்திவரச் சொன்னார் அதுவிஷயத்தில் அவருக்கு ரொம்பவும் மனஸ்தாபம்.

தேசிங்கு தரு.

மலரளிகொண்டைச்சொருக்கிலே
என்ற திருப்புகழ் வர்ணமெட்டு.
இராகம்—ஆனந்தபைரவி—தாளம்—ஆதி.

| | | |
|---|---|---|
| அலையரிசக்ரப்புவிக்குள்ளே | ஒரு | |
| இடமிகுஉக்ரப்புயத்தனு | கிய | |
| அரசனெனத்தன்னகத்திலே | துளி | யறியாதே |
| அவசரமெத்தப்பொறுத்திடா | மலே | |
| எமதிடகப்பங் கொடுத்திட | ரென | |
| லகமதிலச்சஞ்செனித்திடா | மலே | வரலாமோ |
| கொடுமுடிவெப்பைத்துலுக்கனு | கிய | |
| மடையனனுப்பச் சமர்த்தனு | வனே | |
| குறைமதிலக்கப்புலுக்கனு | கிய | முழுமுடா |
| கொலைபுரிந்திந்தக்ஷணத்திலே | நரி | |
| கழுகுகளுக்குக்கொடுப்பனே | உனை | |
| குவலையமொத்துப்பிழைக்கவே | யினி | விடுவேனே |
| கரியவனம்பொற்பதத்தையே | தொழு | |
| திருமணணிந்துத்துலங்கலா | னேனே | |
| தனமொடுயிர்த்துப் பிழைக்கவேவி | னேன் | செலுவாயே |



(தே—வ—ம்)—அடே! மடப்பயலே நீ எந்தவிதமானதைரியத்தைக்கொண்டு என்னிடங் கப்பங்கேட்கவந்தனை அல்ல உன்னை அனுப்பிய அந்தநவாப்பு என்சாமர்த்தியமறிந்திலேபோலும் அடே அந்த டில்லியரசனே எனக்குக்கப்பங்கட்ட இந்த செஞ்சிக்கோட்டையை அரசிடும் தேசிங்குமுன் இந்த துத்தத்துலுக்கப்பையனு கப்பங்கேட்கத் தலைப்பட்டான் அடே உன்னை வெட்டிவிடுவது ஞாயமாயிருக்க உன்னெற்றியிலிருக்கும் நாமத்துக்கஞ்சி உன்னை விட்டுவிட்டேன் ஓடிப்போ.

## 13-வது ஸீன்

## ஆர்க்காட்டு நவாப்பு தர்பார்.

(நவா—வ—ம்)—மந்த்ரீ தோன்றமல்லனை இதுபரியந்தம் காணவில்லை அவன்வந்ததும் அந்தபணத்தைப்பெற்று நமதுகளஞ்சியத்திற்கனுப்புவாய் நான் அந்தப்புரஞ் சென்றுவருகிறேன்.

(மந்—வ—ம்)—ப்ரபூ இதோ தோன்றமல்லன் வருகிறான் தெரிந்துகொண்டுபோகலாம்.

### தோன்றமல்லன் செஞ்சிக்குப்போய்த் திரும்பிவருதல்.

(நவா—வ—ம்)—தோன்றமல்லா.

(தோ—வ—ம்)—ப்ரபூ.

ராஜன் தரு

ஹைமலகதராங்கி என்ற வர்ணமெட்டு.
இராகம்—இந்துஸ்தான்காப்பி—ஏகதாளம்.

இந்தவலங்கோலம் வந்ததென்ன மல்லா, மல்லா மல்லா
என்னசொன்னான் உன்னையன்னன்
ஏது உந்தன்னெற்றிமீது நாமம் சொல்வாய் சொ சொ
எவர் செய்த வகைமோசம்புவிமீதிலே மல்லா ம ம (இ)

தோன்றமல்லன் தரு.

எங்கேபோருயோ என்ற வர்ணமெட்டு.

இராகம்—தன்யாசி—தாளம்—ஆதி.

செப்புவதென்ன நான் தப்பிப்பிழைத்ததெவர்
செய்திடு பாக்கியமோ (செ)

அநுபல்லவி.

ஒப்பியுமதுடைய கப்பம்பெறுவதற்காய்
உற்றங்கவனிடத்தில் பெற்ற அவஸ்தைகளை (செ)

சரணம்.

தங்களிடத்தில் முன்னம் பொங்கமுடனேசொன்ன
தைரியமெல்லாமிப்போ போச்சு
தாரணிக்குள்ளிருந்த தேரணிராஜ மைந்தன்
ருனேபுகழ்பெருக லாச்சு
பங்கமடைவோமேதே சிங்குவிடம் பேசினல்
பகுதிப்பணமென்றதோர் பேச்சு
பாலன்புயபலமும் கோலமுமிங்கெண்ணினல்
பருக்குதையையோ பெரு மூச்சு
சங்கடமிதுவென்று லாகாது ஆகாது
சண்டைக்குப்பயமல னண்டையிற்கிடையாது (செ)

---

நவாப்பு தரு

இனிமேலே மனந்தாளேன்
எந்தன்னையாளுர்க்கு முந்திநிரைசெய்வேன் செ செ
யினப்பயல் தேசிங்கானவனைக் கொய்வேன் கொ கொ
எதுவோமவனே டெதிர்த்து நம
திடநடக்கட்டுமவன் சார்த்து இனி
வாதுடன் படைகளை வகுத்து நீ
வைத்திடுவாயதிற் பொருத்து
வருவீரினியே புரிவோம் சமரே
வம்பன் தேசிங்குவைக்கும்பலோடு வெல்ல வெ வெ (இ)



(நவா—வ—ம்)—தோன்றமல்லா நமது யுத்தவீரர்களுக்கு அறிக்கையிட்டு அவாளவாளுடைய சேனைசைன்யங்களை தயார்படுத்தச்செய் உன்னெற்றியில் நாமம்வைத்தது யார்

(தோ—வ—ம்)—தேசிங்கின் உத்தரவினுல் நானே வைத்துக் கொண்டேன் இந்தநாமந்தான் என்னை உயிருடன் கொண்டுவந்து சேர்த்ததென்றறியுங்கள்.

(நவா—வ—ம்)—அடே அந்தத் துஷ்டன் என்பகுதிப்பணத்தையும் கொடுக்காது என்னை அலக்ஷியம்செய்ததுமோன்று உன்னெற்றியிலும் நாமத்தை யிட்டனுப்பினனல்லவா! இருக்கட்டும் அவனை னதுவாளினுல் இரண்டுதுண்டாய் வெட்டி மற்றகாரியம்பின்னுல் பார்க்கிறேன் ஜல்திபுறப்படு யுத்தத்திற்கு

செஞ்சிக்கோட்டை யுத்தகளம்.

(நவாப்பு—வ—ம்)—தோன்றமல்லா நமது சேனு சைன்யங்களையெல்லாம் யூகம்வகுத்துவை.

(தோன்றமல்லன் வசனம்)—பிரபு அப்படியே.

(நவா—வ—ம்)—ஹே சுபங்கி துரை செஞ்சிக்கோட்டையின் மத்தியில் சண்டைகொடிகாட்டி பிரங்கியால் கோட்டைவாயிலையிடி

(சுபங்—வ—ம்)—அப்படியே.

14-வது ஸீன்

## செஞ்சிக்கோட்டை ஸ்ரீரெங்கநாதர்கோவில்

## [illegible]சிங்கு ஸ்ரீரெங்கநாதரை ஆராதனை செய்தல்.

திருத்தாண்டகம்

இராகம்—சங்கராபரணம்.

செங்கமலத்திருமகளும் புவியுஞ் செம்பொன்
திருவடியினிணைவருடமுனிவரேத்த
வங்கமலி[illegible]கடலுள்ளானந்தனென்னும்
வரியர[illegible]ணைதுயின்ற மாயோன்காண்மின்

எங்குமசினிறைபுகழ் நால்வேதமைந்து
வேள்விகளுங் கேள்விகளு மியன்றதன்மை
அங்கமலத்தயனனையார்ப்பிலுஞ் செல்வத்
தனியமுந்தார்னின்று கந்தவமாரேறே.

வேதநூற் பிராயநூறு மனிதாம்புகுவராகில்
பாதியுமுறங்கிப்போகும் நின்றதிற்பதினையாண்டு
பேதைபாலகனதாகும்பிணிபசி மூப்புத்துன்பம்
ஆதலாற்பிறவிவேண்டேன் அரங்கமாநகருளானே.

பொன்னார் மேனியனே யென்றதேவாரப்பண்

இராகம்—மூகாரி—தாளம்—ஆதி.

தாயேதந்தையெனும் தாரமேகிளை மக்களெனும்
நோயேபட்டொழிந்தேன் நின்னைக்காண்பதோராசையினால்
வேயேய்பூம்பொழில்சூழ் விரைவார்திருவெங்கடமென்
ஆயாவந்தடைந்தேன் அடியேனையாட்கொண்டருளே

## நவாப்புபாளையம் கோட்டைக்கு வெளிப்புறத்தில் யுத்தக்கொடி நாட்ட தோணிசிங்கு தேசிங்குக்குத் தெரிவித்தல்.

தரு.

ஆனந்தநாயகனருங் கணையாளியை என்ற மெட்டு.
இராகம்—முகாரி—தாளம்—ஆதி.

என்னவலங்கோலம் இதுவென்ன காலம்
எவரோபடையெடுத்து எதிர்த்து வந்தாரோபாலா (எ)

இன்னமென்ன பூஜை எழுந்திருபாலா
எவரோபடைத்து எதிர்த்துவந்தாரேசிலா (எ)

(தோ—வ—ம்)—தேசிங்கு நமது கோட்டைக்கு அப்புறத்தில் நவாப்பு படையெடுத்து யுத்தத்திற்குவந்து அட்டகாசஞ் செய்கிறான் நீ இன்னம் பூஜைபண்ணிக்கொண்டிருப்பது உசிதமல்ல.

(தேசி—வ—ம்)—ஐயா! நமது சேனைசைன்யங்களையெல்லாம் தயார்படுத்துங்கள் இந்தக்கடிதத்தை சத்தியபுரியிலிருக்கும் எனது நேசனாகிய மௌத்துகானுக்கு அனுப்புங்கள் அவனும் வருவான் நானும்வருகிறேன் நவாப்புசேனைகளையெல்லாம் அ... பயப்படாதீர்கள்.

(தோ—வ—ம்)—அப்படியே.

முதற்பாகம் முற்றிற்...

148170
...600 00...